No. of Printed Pages : **8**

# 1374 (NP)

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

# பகுதி - III — சிறப்புத் தமிழ்
# Part III — Advanced Language — TAMIL

கால அளவு : 2.30 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - I

**I.** குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்தெழுதவும்.

**1.** ‘நாரத கானம் நலந்திகழ்நாடு’ - இவ்வடியிலுள்ள கானம் எனும் சொல்லிற்குப் பொருந்திய பொருள் யாது ?

(அ) ஞானம் (ஆ) அருள் (இ) வீரர் (ஈ) இசை

**2.** ஆகுபெயர் உள்ள பாடலடி எது ?

(அ) அழுக்காறு உடையான்கண் ஆக்கம்

(ஆ) உலகத்தோடு ஒட்ட ஒழுகல்

(இ) ஒழுக்கம் உடைமை குடிமை

(ஈ) ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர்

[ திருப்புக

3. ‘நாடுகெழு தாயத்து நனைந்தலை யருப்பத்து’
என்னும் பதிற்றுப்பத்துத் தொடரில் ‘அரண்’ எனப் பொருள் தரும் சொல் யாது ?

(அ) தாயம் (ஆ) அருப்பம்
(இ) நாடு (ஈ) நனைந்தலை

4. நெய்தற்கலியின் ஆசிரியர் யார் ?

(அ) நல்லுருத்திரன் (ஆ) நல்லந்துவனார்
(இ) பெருங்கடுங்கோ (ஈ) இளநாகனார்

5. புறநானூறு குறிக்கும் துறைகளின் எண்ணிக்கை :

(அ) 55 (ஆ) 65 (இ) 35 (ஈ) 45

6. ‘வயந்தமாலைக்கு மாதவி யுரைத்த
உயங்கு நோய் வருந்த’ - இதனுள் குறிக்கப்படும் உயங்கு நோய் எது ?

(அ) சுதமதிக்கு நேர்ந்த கேடு
(ஆ) கண்ணகிக்கும் கோவலனுக்கும் நேர்ந்த துன்பம்
(இ) மணிமேகலையின் துயரை மாற்றுதல்
(ஈ) மாதவி மலர்களை விரும்புதல்

7. ‘‘கதிர் முடியும் இம்மையிலே கண்ணுற்றேனே’’ - இங்குக் குறிக்கப்பெறும் கதிர்முடி யாருக்கு உரியது ?

(அ) கண்ணன் (ஆ) துரியோதனன்
(இ) அர்ச்சுனன் (ஈ) கன்னன்

8. மக்கள் அறியாமையிலிருந்தனர் எனத் தெரிவிக்கும் சுரதாவின் பாடலடி எது ?

(அ) அமைப்போர்க்குப் பல்லவியாய்
(ஆ) கீர்த்தி ஒருநாளும் அழிவதில்லை
(இ) பள்ளத்தில் நாம் வீழ்ந்து கிடந்தோம்
(ஈ) வெள்ளத்தில் தோன்றியெழும் தண்ணீர் முட்டை

**9.** ஐயா! நேற்று இராத்திரி தங்கள் முன்னோர்கள் கதையைச் சொல்லி வந்தீர்களே! இதில் பயன்படுத்தப்பட்டுள்ள பேச்சு வழக்குச் சொல் எது ?

(அ) இராத்திரி (ஆ) சொல்லிவந்தீர்களே

(இ) ஐயா! (ஈ) நேற்று

**10.** ஈழத்தமிழரின் பேச்சில் வேற்றுமை உருபு மாற்றம் உள்ளதைக் கீழ்வருவனவற்றுள் எது தெரிவிக்கிறது ?

(அ) ஒரு நாழிகை வழி (ஆ) திணைக்களம்

(இ) சந்தாலே (ஈ) கொடுத்தனான்

**11.** ‘மன விருப்பமே மன ஊக்கமாகவும் மன உறுதியாகவும் செயல்படும்’ - இவ்வாக்கியத்திற்குப் பொருந்தியதைக் கீழுள்ளனவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கவும்.

(அ) மன விருப்பம் = மன ஊக்கம் + மன உறுதி

(ஆ) மன விருப்பமும், மன ஊக்கமும் = மன உறுதி

(இ) மன விருப்பம் → மன ஊக்கம் → மன உறுதி

(ஈ) மன விருப்பம் + மன ஊக்கம் = மன உறுதி

**12.** ஆயர் குல மக்கள் எந்நிலத்தைச் சார்ந்தவர்கள் ?

(அ) மருதம் (ஆ) நெய்தல்

(இ) குறிஞ்சி (ஈ) முல்லை

**13.** ‘கவிதை மானுடத்தின் ஊனுயிரில் ஒன்ற வேண்டும்’ - எனக் கூறிய கவிஞர் யார் ?

(அ) சுரதா (ஆ) முடியரசன்

(இ) பாரதிதாசன் (ஈ) பாரதியார்

**14.** கீழுள்ளனவற்றுள் எது எளிமையாகத் தயாரிக்கப்படும் மருந்து ?

(அ) எண்ணெய் (ஆ) புடமிடல்

(இ) சூரணம் (ஈ) பற்பம்

15. கீழ் உள்ளனவற்றில் எதனில் உவமையாகு பெயர் உள்ளது ?

(அ) தக்க சமயத்தில் கொடுத்தான் (ஆ) குறள் படித்தாள்

(இ) சென்னை செழிக்கிறது (ஈ) மயில் ஆடுகிறாள்

16. கீழுள்ளனவற்றுள் எது பெயரெச்ச வாய்ப்பாட்டிற்கு உரியது ?

(அ) செய்த (ஆ) செய்யின் (இ) செய்யா (ஈ) செய

17. கீழுள்ளனவற்றுள் எது ஒட்டணியைக் குறிக்கும் :

(அ) வேற்றுமையணி (ஆ) தற்குறிப்பேற்றணி

(இ) பிறிதுமொழிதலணி (ஈ) புகழாப் புகழ்ச்சியணி

18. நீருக்கும், கண்ணாடிக்கும் சிலேடையாக அமையத்தக்கது எது ?

(அ) வழவழப்பாயிருக்கும் (ஆ) தேங்கியே நிற்கும்

(இ) ஆடிக் குடத்தடையும் (ஈ) மூடித்திறக்கின் முகங்காட்டும்

19. கீழ்வருவனவற்றுள் ஐக்கூ என்னும் கவிதையின் தாயகம் எது ?

(அ) இந்தியா (ஆ) அமெரிக்கா

(இ) சீனா (ஈ) ஜப்பான்

20. குறளடி நான்காய் ஒருபொருள் குறித்து ஒரு செய்யுள் மட்டும் வருதல் .....

(அ) வஞ்சித்துறை (ஆ) வஞ்சித்தாழிசை

(இ) சிந்தடி வஞ்சிப்பா (ஈ) அளவடி வஞ்சிப்பா

## பகுதி - II

**II.** பின்வரும் வினாக்களுள் **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு **மட்டும்** விடை தருக வினா எண் **30 -க்குக் கண்டிப்பாக** விடையளிக்க வேண்டும். **7x2=14**

**21.** ஒழுக்கத்தினை ஏன் உயிரினும் மேலாகப்போற்ற வேண்டும் ?

**22.** சித்திரச் சிலைக்கை விசயன் யார் ? ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறார் ?

**23.** வினையெச்ச வாய்ப்பாடுகளைக் கூறுக.

**24.** தமிழகத்தின் எப்பகுதியினரின் ஒலிப்பு முறை ஈழத்துத் தமிழ் மக்களின் பேச்சில் கலந்துள்ளதாகச் சாலை சாலினியார் கூறுகின்றார் ?

**25.** அறிவுபெறும் ஐந்து வழிகளைப் பாவலரேறு வழி நின்று விளக்குக.

**26.** ஆபிரகாம் பண்டிதர் மருத்துவத்துறையில் ஆர்வம் பெறக் காரணமாய் இருந்தவர் யார் ?

**27.** பாரதிதாசனின் ஆத்திசூடி நூலின் சிறப்பாகத் திலகவதி அவர்கள் எதைக் குறிப்பிடுகிறார் ?

**28.** 'மருந்துநூலான சிறுபஞ்சமூலம்' பற்றிக் குறிப்பு வரைக.

**29.** சொல்லாகு பெயரை எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

**30.** 'கருங்கல்லிடை நாருரிப்பாருண்டோ' ? - இவ்வரிகளால் பாரதியார் உணர்த்தும் கருத்து யாது ?

[ திருப்புக

## பகுதி - III

**III.** பின்வரும் வினாக்களுள் **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு **மட்டும்** விடை தருக. வினா எண் **40 -க்குக் கண்டிப்பாக** விடையளிக்க வேண்டும். **7x3=21**

**31.** 'புற்றடங் கரவி னொடுங்கிய வம்பின்' ... பொருள் நயத்தை எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

**32.** 'கவேரனாங் கிருந்த கவேர வனமும்' - இதனுள் பொதிந்துள்ள புராணக் கதை யாது ?

**33.** கண்ணன், கன்னனை அணுகி இரந்து நின்றதனை விளக்குக.

**34.** 'வெள்ளத்தில் தோன்றியெழும் தண்ணீர் முட்டை விரைவினிலே அழிந்து விடும்' - இதனுள் அமைந்த சொல்நயம் யாது ?

**35.** 'முல்லை நிலமக்களின் தெய்வ வழிபாடு' பற்றிப் பேராசிரியர் ச. கணபதிராமன் கூறுவன யாவை ?

**36.** புதுக்கவிதைக்கு வரையறை தந்து ஒரு சான்று தருக.

**37.** இரட்டைக்காப்பியங்கள் பற்றி விளக்கம் தருக.

**38.** 'பாரதிதாசன்' - குறிப்பு வரைக.

**39.** ஈரறிவு, மூவறிவு உயிர்கள் பற்றி விளக்குக.

**40.** சங்ககால சிறு தெய்வங்களின் பெயர்களை எழுதுக.

## பகுதி - IV

**IV. அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. **7x5=35**

**41.** (அ) தோழியின் அறிவு மேன்மையை நெய்தற்கலி வாயிலாக விளக்குக.

**அல்லது**

(ஆ) திருவள்ளுவரின் ஏதேனும் ஐந்து சொல்லாட்சித் திறனைப் ''பிரிவாற்றாமை அதிகாரம் கொண்டு விளக்குக.

**42.** (அ) 'உலகம்' ... எனத் தொடங்கும் இறைவாழ்த்துப்பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**அல்லது**

(ஆ) ''விரைந்து''... எனத் தொடங்கும் குறளையும் ...'வளை' என முடியும் குறளையும் அடிபிறழாமல் எழுதுக.

**43.** (அ) 20 -ஆம் நூற்றாண்டில் தொடக்ககால உரைநடையில் பிறமொழிச் சொற்கள் மலிந்தமையினை, டாக்டர் உ.வே.சா -வின் கட்டுரை கொண்டு விளக்குக.

**அல்லது**

(ஆ) ஈழத்தமிழ் மக்கள் பேச்சிலுள்ள நல்ல சொற்கள் அமைந்துள்ள தொடர்களை விளக்குக.

**44.** (அ) சங்க இலக்கிய காலத்தில் வழிபாட்டு முறைகள் பற்றி பேராசிரியர் ச. கணபதிராமன் எவ்வாறு நிறுவுகிறார் ?

**அல்லது**

(ஆ) ஆபிரகாம் பண்டிதரின் ஆசிரியப்பணி, இசைப்பணி பற்றிக் குறிப்பு வரைக.

[ திருப்புக

**45.** (அ) சிறுபஞ்சமூலம், குறிப்பு வரைக.

**அல்லது**

(ஆ) சிலப்பதிகாரம் ஒரு முத்தமிழ்க் காப்பியம் ஏன் ?

**46.** (அ) வஞ்சப் புகழ்ச்சி அணியை விளக்குக.

**அல்லது**

(ஆ) தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று - விளக்குக.

**47.** (அ) 'ஒழுக்கம் உயர்வு தரும்' - இத்தொடரை விளக்கிக் கட்டுரை ஒன்று வரைக.

**அல்லது**

(ஆ) நும் கல்வித்தகுதிக்கு ஏற்ற பணி வேண்டி உரிய நிறுவனத்திற்கு விண்ணப்பம் வரைக.

**- o O o -**